விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆவணி 27 முஹர 7 இதழ் 214

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12-9-1986

### பருத்தித்துறையில்

## இராணுவச் 'சென்றி' மீது 'கனன்சார்ஜ்' தாக்குதல்

(நமது நிருபர்)

பருத்தித்துறை இராணுவ முகாமில் 'சென்ரிக்கு' நின்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் 'கனன் சார்ஜ்' தாக்குதல் நடத்தியதில் அவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுப்பிற்பகல் 1-30மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றி தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்துளள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''பருத்தித்துறை இராணுவ முகாமினுள் ஹெலிகொப்டர் விமானம தரையிறக்கப்படும் போது வழமையாகச் சில ராணுவத்தினர் ஏற்கனவே மக்கள் காலி செய்துள்ள நடராஜர் கலையரங்கம் பக்கமாக உள்ள வீடுகள் சென்ரிக்கு வந்து நிற்பது வழக்கம் அவ்வாறு நேற்றுப்பி.ப 1 30மணியளவில் ஹெலிகொப்டர் தரையிறக்கப்படும் போது அங்கு வந்த ராணுவத்தினர் முன் கூட்டியே எமது வீரர்களால் வைக்கப்பட்ட ''கனன் சார்ஜ்'' இனை வெடிக்கச் செய்ததில் கொல்லப்பட்டுள்ளனர். [மா]

● மட்டு—கல்முனை வீதியில்

# போராளிகள் நேரடி தாக்குதல்

# 6 பொலிஸார் பலி; பலர் காயம்

## வாகனங்கள் சேதம்

(மட்டக்களப்பு நிருபர்)

**மட்டக்களப்பு, கல்முனை வீதியில் புதுக்குடியிருப்பு என்னுமிடத்தில் ரோந்துசென்ற பொலிஸ் வாகனங்கள் மீது போராளிகள் கண்ணி வெடித் தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டதில் ஆறு பொலிசார் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமுற்றனர்.**

**நேற்றுபிற்பகல் 3மணியளவில் இத்தாக்குதல்சம்பவங்கள்இடம்பெற்றன.**

இச் சம்பவத்தின்போது தாக்குதலுக்குள்ளான வாகனங்களில் ஒன்றில் பொலிஸ் உயரதிகாரி குடும்பத்துடன் வந்ததாகவும் அவ்வுயரதிகாரி பின்னர் கடத்தப்பட்டு விட்டதாகவும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுப் பிற்பகல் அம்பாறையிலிருந்து பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாதுகாப்புடன் கல்லடியிலுள்ள அரச வடிசாலைக் கூட்டுத்தாபன சாராயக்குதத்துக்கு பவுஸரில் ஸ்பிறிட் கொண்டு வரப்பட்டது

2 மினி பஸ்களிலும் 2 ஜீப் வண்டிகளிலும் பொலிசார் வந்து கொண்டிருந்தனர்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் ரோந்து வந்த வாகனங்களில் முதல் வந்து கொண்டிருந்த ஜீப்வண்டி அண்மித்தபொழுது சண்ணிவெடி வெடித்தது. அதனைத் தொடர்ந்து போராளிகள் பொலிசார் மீதும் வாகனங்கள் மீதும் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்த்தனர். இத்துப்பாக்கிப் பிரயோகத்தால் மேலும் பொலிஸ் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

போராளிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தால் 'ஸ்பிறிட்' கொண்டுசென்ற பவுஸரும் சேதமடைந்ததால் பவுஸரிலிருந்து 'ஸ்பிறிட்' அதிகளவுவெளியேறி வீதியெங்கும் தேங்கிக் கிடந்தது.

மேற்படி சம்பவங்களைத்

(4ம் பக்கம் பார்க்க)

## இன்று சென்பற்றிக்ஸ் கல்லூரியில் பொருட்காட்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மறுமலர்ச்சிக் கழகமும் மாணவர் முன்னணியும் இணைந்து நடத்தும் பொருட்காட்சி இன்று யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பமாகின்றது

இன்று ஆரம்பமாகும் இந்தப் பொருட்காட்சி இம்மாதம் 20ம் திகதி வரை நடைபெறும் தினமும் காலை 8,30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 00 மணி வரை இப் பொருட்காட்சி நடைபெறும்.

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும முயற்சியாக இப் பொருட்காட்சி நடத்தப்படுகிறது கடற்றொழில் விவசாயம், சிறுகைத் தொழில், சுகாதாரம், கல்வி, அரசியல், விஞ்ஞானம், எமது பாதுகாப்பு, நீர் வளம் போன்றவை இப் பொருட்காட்சியில் முக்கிய இடம் பெறுகின்றன. (ஒ)

## மின்மாற்றி தகர்ப்பால் திருமலை மாவட்டம் இருளில்

கொழும்பு, வியாழன்.

அனுராதபுரத்துக்கும் திருகோணமலைக்குமிடையே பதின் மூன்று லட்சத்து இருபதாயிரம் வோல்ட் மின்சாரத்தை கடத்தும் இரண்டு மின்மாற்றிகளை தீவிரவாதிகள் தகர்த்துள்ளதை தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் பெரும்பகுதி இருளில் மூழ்கியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இச்சம்பவம் திருகோணமலையிலுள்ள தம்பலகாமத்தில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தினால் திருகோணமலை, கிண்ணியா, புல்மோட்டை, சீனன்குடா, நிலாவெளி, மூதூர், கோமாரன் கடவை, கந்தளாயின் சிலபகுதிகளும் மின்சார விநியோகமின்றி இருளில் மூழ்கியுள்ளதாகவும் அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கிறது. (சி)

## எரிபொருள் விற்பனை குறித்து புலிகள் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், வெள்ளி.

எரிபொருள் விற்பனையை ஒரு கட்டுப்பாட்டு விலையின் கீழ் வற்பனை செய்யப்பட வேண்டுமென்று சகல எரிபொருள் விற்பனையாளருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அநத அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

'தனியார் சுய விருப்பத்தின்படி கொள்ளை இலாப நோக்கோடு நாளுக்கு நாள் எரிபொருள் விலையில் ஏற்ற இறக்கம் காணப்படுகிறது. சமுதாய ரீதியாக ஏற்பட்டுள்ள இவ் ஒழுங்கீனத்தை கட்டுப்படுத்துமுகமாகவும் எம் மக்களின் நலன்களை முதன்மைப்படுத்துமுகமாகவும் அத்தியாவசிய தேவைகளுள் ஒன்றான எரிபொருளை இன்று முதல் ஒரு நியாயமான கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்தல் வேண்டுமென சகல எரிபொருள் விற்பனையாளர்கட்கும் அறிவுறுத்துகிறோம்''

''கட்டுப்பாட்டு விலையாக ஒரு லீற்றர் பெற்றோல் ரூ. 17-50 சதமாகவும் போத்தல் ரூ. 13-46 சதமாகவும் இருக்கும் டீசல் லீற்றர் ரூ 12-00 வாகவும் போத்தல் ரூ 9-23 சதமாகவும் இருக்கும். மண்ணெண்ணெய்லீற்றர் ரூ 10-00 வாகவும் போத்தல் ரூ. 7-70 சதமாகவும் இருக்கும்.

''இந்தக்கட்டுப்பாட்டு விலை விற்பனையை மீறுவது ஒரு மக்கள் விரோத செயற்பாடாகவே கருதப்படும்''

## ''சகலவழிகளிலும் அரசு தமிழ் மக்களை புறக்கணித்து வருகிறது''

கொழும்பு, வியாழன்.

''அரசாங்கம் தமிழ் மக்களை சகல வழிகளிலும் புறக்கணித்துவருவதால் இன்று தமிழ்மக்கள் அரசாங்கத்திற்கு எதுவித உதவிகளையும் செய்யவில்லை.'

இவ்வாறு வன்னி சமாதான குழுத்தலைவரும், வவனியா கண்டிவீதி விகாரை பிரதான பிக்குவுமான சியாம்பல கஸ்பவ விமலதார தேரோ கடந்த எட்டாம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தனவை சந்தித்த போது இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பு குருநாகல் பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்தில் இடம் பெற்றது.

ஜனாதிபதியிடம், ''வட

(8ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியிலிருந்து வந்த இரு தனியார் வாகனங்கள் வவனியாவில் கடத்தல்

வவனியா, வியாழன்

வவனியாவில் இன்று இரண்டு தனியார் வாகனங்கள் இனந் தெரியாத கோஷ்டி ஒன்றினால் கடத்தப்பட்டுள்ளது.

தென்பகுதியிலிருந்து வவனியா வந்த இந்த இரண்டு வாகனங்களில் ஒன்று காலையும் மற்றது பிற்பகலும் கடத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தை தொடர்ந்து இராணுவம் ஹெலிகொப்டரில் அப்பகுதி முழுவதிலும் இவ் விரண்டு வாகனங்களையும் பல மணி நேரம் தேடியதாகவும் இதனால் ஏற்பட்ட பதற்றம் காரணமாக அப்பகுதியில் வாகனம் எதுவும் செல்லவில்லை என்றும் கூறப்படுகிறது. (சி)

## காரைநகர் கடற்பகுதியில் படையினர்-புலிகள் கடும்சமர்

[நமது நிருபர்]

காரைநகர்கடற்பிராந்தியத்தில் கடற்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்றுக்காலை இரு மணித்தியாலங்களாக கடும் சமர் நடந்தது.

கடற்படையினருக்கு உதவியாக இரு ஹெலிகொப்டர்கள், ஒரு 'சீ-பிளன்', ஒரு 'கண்போட்' தாக்குதல்கள் நடத்தியபோதும் அவை அனைத்தும் தமது போராளிகளின் எதிர்த்தாக்குதலால் முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''காரைநகர் கடற் பிராந்தியத்தில் நேற்றுக்காலை 9மணியளவில் எமது படகொன்று சென்று கொண்டிருந்த சமயம் கடற்படையினரின் 'டோரா' கண்போட் எதிர்பாராத விதமாக தாக்குதலை மேற்கொள்ள ஆரம்பித்தது.

படகில் இருந்து பாரிய துப்பாக்கிகளினாலும், மோட்டார் ஷெல்களினாலும் கடற்படையினர் தாக்குதலை மேற்கொண்ட போதும் எமது வீரர்கள் எதிர்த் தாக்குதல் புரிந்தவாறு எதுவித சேதமும் இன்றி கரை ஒதுங்கினார்கள்,

கரை ஒதுங்கியவுடன் இரு ஹெலிகொப்டர்கள் ஐம்பது கலிபர் துப்பாக்கியால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டும், ரொக்கட் மோட்டார்கள் அடித்தும் தாக்குதலை தொடர்ந்தன. அதே சமயம் வேவு விமானம் ஒன்றும் உயரப்பறந்துவட்டமிட்டது.

கடலில் இருந்து ''டோரா'' கண்போட் பாரிய துப்பாக்கிகளின் மூலமும் ஷெல்களினாலும் தாக்குதலை மேற்கொண்டது.

மேலும் அவ்விடத்திற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

மைசூர் அரிசி நம்பர்-1 கசிவில்லாதது, சுத்தமானது, தரமானது, சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

---

தாயும் 2½ மாத 8 பன்றிக்குட்டிகளும் விற்பனைக்குண்டு. ந ரவி, C/o சி செல்லத்துரை, விளாத்தியடி லேன், உரும்பிராய். [C 4566]

---

Christombu Farm, Shetna Farm சேவற்குஞ்சுகள் முறையே 14ந் திகதி, 16ந் திகதிகளில் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்க, சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில், [C 4576]

---

நல்ல நிலையிலுள்ள 86 ஸ்ரீ Honda MB-8 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: நித்தியானந்தம், 131/4, பருத்தித்துறை வீதி, நல்லூர். (நூல் நிலைய அருகாமையிலுள்ள ஒழுங்கை) (C 4554)

---

## தேவை

பால் பண்ணையில் வேலை செய்ய அனுபவமுள்ள ஆட்கள் மற்றும் பழைய தகரக் கொட்டில்கள் தேவை. S. S Mill and Farm, Moolai South, Chulipuram. [C-4562]

---

இறைச்சிக்கு கோழி தேவை கிலோ 35 ரூபாவிற்கு மேற்பட்ட பல விலைகளில் எவ்வகை இனமாயினும் பெற்றுக் கொள்ளப்படும். ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல, 23131 [C-4565]

---

Leicaflex. Hassalblad, 4'' x 5'' Camera மற்றும் Professional Cameras தேவை S S Mill and Farm. Moolai South, Chulipurm. (C4559)

---

தமிழ்நாட்டில் புத்தகங்களை பிரசுரம் செய்ய விரும்பும் ஈழத்து எழுத்தாளர்கள் புத்தகப்பிரதி/ கையெழுத்துப் பிரதியுடன் தொடர்பு கொள்ளவும், All Subjects Wanted S S Mill and Farm, Moolai South, Chulipuram, (C 4563)

---

யாழ். மாவட்டத்தில் ஒரு சிறு வீடு அல்லது கடை வாடகைக்குத் தேவை. விளம்பர இல: C 4574, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 4574

## சேவை

வாட்டப்பம் மோட்டர், மின்விசிறி, கிறைண்டர் அடுப்பு, ராண்ஸ்போமர், வாசிங் மெஷின், ஸ்ராட்டர் றிப் சுபிச் ஆகியன திருத்த, றீவைண்டிங் செய்ய- Omega, Manipay Road, Jaffna. [ஈழநாட்டிற்கு எதிரில்] பழுதடைந்த உபகரணங்கள் விலைக்கும் வாங்குவோம். [C 4564]

---

## வகுப்புகள்

108, Brown Road, Jaffna A/L 87 இரசாயனம் ஆசிரியர் - சத்தீஸ், ஆரம்பம்: 13-09-86 சனி 3-30 p.m. வகுப்பு நேரங்கள்: சனி, ஞாயிறு 2-30 p.m- 3-30 p.m and 3-30 p.m. - 4-30 p.m [C-4404]

---

கரவெட்டி மொடேன் எடியுகேசன் சென்ரரில் க. பொ. த. [உயர்] 87-ம் ஆண்டு பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு கலை / வர்த்தக / விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. [C-4412]

---

Radio, T. V., வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம் 13-9-86-ல் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. விரும்பியோர் தொடர்பு கொள்ளவும்: Vispa Engineering Aid Hall, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 4540

---

## மணப்பந்தல்

இந்து வேளாள உயர்குலத்தைச் சேர்ந்த 29 வயதுள்ள உதயத்துச் செவ்வாய் உடைய Engineer பெண்ணுக்கு மணமகன் தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி-: விளம்பர இல C4578 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C-4578]

---

### WANTED

Wanted Immediately Welder Cum Blacksmith to handle Grill Iron and Gates. Salary Negotiable Call over before 20th instant. Rajan Iron Works, 8, Stanley Road, Jaffna. (C 4541)

---

### FOR SALE

Tamil Typewriters 10''x12'' Field Cameras, rechargeable Accumilator, Batteries for Camera Flash and Body Building Equipments for Sale S S Mill and Farm, Moolai South, Chulipuram. [C 4561]

---

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

## A/L 87 DAY PAPER CLASS

ஆரம்பம்: 15-9-86
வெள்ளி- 6-15—8-15
தூய / பிரயோக } கணிதம்
A. பத்மநாதன்

**Niru Tuition Centre, Kondavil**

(A 1325)

---

## மின்தடை

1986 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 தொடக்கம் மாலை 4-30 வரை அவசர திருத்த நிர்மாண வேலைகளுக்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் (ஆனையிறவு, பரந்தன், ஒட்டுசுட்டான், நெடுங்கேணி. கொக்காவில், மாங்குளம், துணுக்காய்) மின் விநியோகம் தடைப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

T. சிறிஸ்கந்தராசா,
மின் பொறியியலாளர்,
கிளிநொச்சி பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
மாங்குளம்.

[A 1258]

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**சவரிமுத்து தொம்மப்பிள்ளை**
(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்)
அன்னையின் மடியில்: 01-05-1915
ஆண்டவன் அடியில்: 13-09-1985

'கல்லறையில் உம்மை வைத்தோம் கண்ணீரால் மூடிவிட்டோம்'

ஓடி மறைந்ததையா ஓராண்டு, உள்ளக்குமுறலுடன் உருகி நிற்கும் உம்மக்களுக்காய் வேண்டிடுவாய் அமலன் திருவடியில்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 13-09-86 சனிக்கிழமை காலை 6-15 மணிக்கு பாண்டியந்தாழ்வு புனித அன்னம்மாள் தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்கு பற்றிப் பிராத்திக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்ளும்,

சகோதரி, பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள்.
78, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

C 4536

---

பல்கலைக்கழக (வெளிவாரி)
**பட்டப்படிப்புகள்**
**G. A. Q., First in Com, LL. B.**
ஆரம்பம்: 14-9-86 ஞாயிறு 8.00 A. M.
**நியு ஸ்டார்**
மல்லாகம்
குறிப்பு: 86 A/L பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.
C 4492

---

## அறிவித்தல்

11-09-86 வெளியான விளம்பரம் தவறானது. வகுப்புக்கள் வழமைபோல் நடைபெறும் என்பதை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அறியத்தருகிறேன்.

இ. அருட்செல்வன்
நிர்வாகி
**New Education Centre**
VADDUKKODDAY (A1263)

---

## இசைப் பயிற்சி

★ கிற்றர் ★ வயலின் ★ எக்கோடியன்
★ மிருதங்கம் ★ ஓகன் ★ பியானோ

போன்ற இசைக் கருவிகள் வாசிப்பதற்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.
ஆர்வமுள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களுக்கு:
உதவிப்பதிவாளர்.
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
(நுண்கலைப் பிரிவு)
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C4567)

---

யா/நடேஸ்வரக் கல்லூரி காங்கேசன்துறை
**திறந்தவெளி அரங்கத் திறப்புவிழா, பரிசளிப்புவிழா, நிறுவினர் நினைவு விழா.**

இடம்: கல்லூரித் திறந்தவெளி அரங்கம்
காலம்: 15-09-1986 திங்கட்கிழமை மாலை 5-00 மணி

பிரதம அதிதி:
உயர்திரு. இரா. சுந்தரலிங்கம்
[யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர், கல்லூரி அபிவிருத்திச்சபை,
காங்கேசன்துறை.
10-9-86. (A1261)

---

## திருமணத் திருமுகம்

அன்புடையீர்

| மணமகன் | | மணமகள் |
|---|---|---|
| சிவநாதன் | ★ | இராஜேஸ்வரி [ஈஸ்வரி] |

காலம்: 14-9-1986 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 8.30 மணிமுதல் பகல் 10.00 மணி வரை
இடம் ''ஆறுமுகவாசம்'' [சங்குவேலிப் பிள்ளையார் கோயில்முன்]

வரவேற்பு: மணமகன் இல்லம்
இடம் ''சரசுவதி வாசா'' 82, சினியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
நேரம்: 14-9-1986 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00மணி முதல் இரவு 7.00மணி வரை

**தங்களை அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றோம்.**

திருமதி புனிதவதி மாணிக்கம்,
சு. புண்ணியசிலன் தம்பதிகள்,
ஜே. கனகரட்னம் தம்பதிகள்,
மா். சிவயோகம் தம்பதிகள்,

ஆறுமுகம் விஜயரட்ணம் குடும்பத்தினர்.
''ஆறுமுகவாசா''
சங்குவேலி,
மானிப்பாய்.

[4569]

### மணிவாக்கு

ஒரு பிரச்னை அரசியல் கால்பந்தாக மாறி விடுமானால் அதில் பல தடுமாற்றங்களுக்கு இடமுண்டு. — பிராங்க் எச். சி. மொன்ட்ஸ்

## நமது நோக்கு

# அந்தக் கடிதத்தின் பின்னணி என்ன?

சிம்பாப்வே தலைநகர் ஹராரேயில் நடந்த அணிசேரா நாடுகளின் மகாநாடு தென்னாபிரிக்க கறுப்புஇன மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு ஊக்கமளிப்பதாகவும் நமீபியாவின் விடுதலையை விரைவுபடுத்துவதாகவும் மட்டுமல்ல இந்த நோக்கங்கள் மிகவிரைவிலேயே நடைமுறை சாத்தியமாவதற்கு முனைப்போடு செயற்ப்படுவதற்கான திட்டத்தை உருவாக்கவும் உதவியுள்ளது.

இந்த அமைப்பின் முன்னைய தலைவர் இந்திய பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி மேற்படி மகாநாட்டின் வெற்றிக்கு பெரு மளவில் பங்குபணி ஆற்றினார். அந்தவகையில் அணிசேரா அமைப்பில் மட்டுமல்லாமல் சர்வதேச அரங்கில் அவரது புகழும். இந்தியாவின் மதிப்பும் மேலும் உயர்ந்து விட்டதை மறுக்கவியலாது.

இந்தவகையில் பலருக்கு பொருமை எழுவதுண்டு. அதுவும் பலகாலம் அரசியலில் ஈடுபட்டுவந்துள்ள வயதில்கூடிய ஆசாமிகள் மனம்வெந்து போவார்கள். இந்தியாவில் மட்டுமல்ல அண்டை நாடுகளிலும்கூட இந்த மனப்பான்மை எழுவது இயற்கை. அதனால் திரு. காந்திக்கு உலக அனுபவம், அரசியல் முதிர்ச்சி ஒன்றுமே இல்லையென்ற வகையில் வசைபாடவும் பலர் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்

ஹராரேயில் இலங்கை நாட்டு பிரதம மந்திரி திரு. ஆர், பிரேமதாஸ வுக்கும், திரு. ராஜீவ் காந்திக்குமிடையில் நடந்துள்ள பேச்சுக்களையடுத்து பத்திரிகையாளர் மகாநாடொன்றில் இந்தியப் பிரதமர் இலங்கையைப்பற்றி வெளியிட்ட காரமான கருத்துக்கள் அவரது ராஜதந்திர முதிர்ச்சியின்மையைக் காட்டுவதாக சிலர் குற்றஞ்சாட்ட முனைந்துள்ளனர் அக்கருத்துக்களை அவர் வெளியிட நேர்ந்த சூழ்நிலைகளை பார்க்கையில் இது முற்றிலும் பொருத்தமற்ற குற்றச் சாட்டாகவே தென்படும்.

பேச்சுக்களின் விபரங்களைத் தொகுத்து ஒரு கடிதமாக வரைந்து திரு ராஜீவ் காந்திக்கு அனுப்பியிருக்கிறார் திரு. பிரேமதாச. அதன் உள்ளடக்கம் அந்தரங்கமானது என்றே இந்தியத் தலைவரும் கருதியுள்ளார். ஆனால் கடிதம் பகிரங்கப்படுத்தப்பட்டுவிட்டது.

இந்த நிலையில்தான் பத்திரிகையாளர்கள் துருவித் துருவிகேட்டகேள்விகளுக்கு பதிலளிக்கையில் "அவர்கள் உண்மையாகவே பிரச்னைக்குத் தீர் வொன்றை விரும்புகிறார்களா? அவ்வாறாயின் அதனைத்தீர்ப்பதற்கு எவ்வளவுகாலம் எடுக்கப் போகிறார்கள்? தீர்வொன்றை அவர்கள் காண்பதற்குமுன் இன்னும் எத்தனை அப்பாவிமக்கள் சாகவேண்டியிருக்கும்?'' என காரமாகவே பதிலளித்துள்ளார் ராஜீவ்காந்தி.

அதோடு நிறுத்தவில்லை, பேச்சுபேச்சென்றுஇலங்கை அரசு இழுத்தடிப்பதில் அவருக்குள்ள வெறுப்பை காட்டும்வகையில் 'எமதுஉதவி தேவையில்லையென்றால் அதனை அவர்கள் சொல்லி விடட்டும்'' என்றும்இடித்துரைத்துள்ளார்.

குறித்த கடிதம் வெளியிடப்பட்ட சூழ்நிலையை திரு பிரேமதாஸ கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் விளக்கும்போது; "அக்கடிதத்தில்அப்படி ஒன்றும் பெரிதாகஇல்லை, திரு. காந்தியின் கருத்துப்பற்றி யாருப் குழப்பமடையவேண்டியதுமில்லை'' என்றார்.

இக்கடிதம் வெளியான விதம்குறித்து திரு. காந்திக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்பதையாரும் மறுக்கவியலாது அதேசமயம் ராஜதந்திரமுறையில் இந்தப்பிரச்னை இருதரப்பிற்குமிடையில் தீர்க்கப்பட்டிருக்கும் என்பதும்தெளிவு.

எதுவாகினும் திரு. காந்தி கூறியிருப்பதுபோல் இலங்கை அரசு பேச்சுவார்த்தைமூலம் பிரச்னைக்கு தீர்வுகாண்பதில் உண்மையாகவே அக்கறைகொண்டிருப்பின் அதற்கான சூழ்நிலையை ஏன் உருவாக்கக்கூடாது?

இந்தியாவின் தலையீடு வேண்டாமென இலங்கை அரசு கூறிவிட்டாலும்கூட இன்று பிரச்னைசிக்கலடைந்துள்ள விதத்தில் இந்தியாவின் அனுசரணையின்றி தீர்வுகாண்பது சாத்தியமில்லை. பிரச்னை திராவிடத்து நிலைமை இப்போதிருப்பதைவிட மேலும் சிக்கலடையவே செய்யும்.

எனவே இந்தியாவின் நட்பை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்வது சகலருக்கும் பயனளிக்கும். தினசரி அப்பாவிகள்பலியாவதனால் யாருக்கும் லாபமில்லை.

## நடேஸ்வராவில் முப்பெரும் விழா

காங்கேசன்துறை, வியாழன் நடேஸ்வராக் கல்லூரி நடாத்தும் நவீன திறந்த வெளியரங்கத் திறப்பு விழா பரிசளிப்பு விழா, நிறுவினர் நினைவு விழா ஆகிய முப்பெரும் விழாக்கள் எதிர் வரும் திங்கட்கிழமை பிற்பகல் மேற்படி கல்லூரியில் அதிபர் திரு. து, பாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு இரா சுந்தரலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேருரை வழங்குவதுடன் நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களும் வழங்குவார்.

மாணவர்களது கலை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

# இலங்கையில் அதிகரித்துவரும் தமிழர் மறைவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

சில சந்தர்ப்பங்களில் ஒருவர் கைது செய்யப்பட்டு குறிப்பிட்ட முகாமுக்கு கொண்டு வரப்பட்டதை அதிகாரிகள் முதலில் ஏற்றுக் கொண்டாலும் பின்னர் அவர்கள் அந்நபர் கைது செய்யப்படவில்லை எனக் கூறியுள்ளனர். சிலசந்தர்ப்பங்களில் கைதானவர் அம்முகாமில் இல்லை எனக் கூறியுள்ளனர்.

85 மார்ச்சில் கிழக்கு மாகாணத்திலுள்ள தொழில் நுட்பக் கல்லூரியிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த ஒரு இளைஞர் களுவாஞ்சிக்குடி முகாமிலுள்ள அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார். அவரது தயாரின் கூற்று:

"...5 நாட்களின் பின்னர் நான் கல்லடி முகாம் சென்றபோது முதலில் ஒருவர் வந்து எமது மகன் களுவாஞ்சிக்குடியில் விடுதலையாகியதாகக் கூறினார். நான் அவ்விடத்தைவிட்டு அசையாமல் அழுது கொண்டு நின்றபோது இன்னொருவர் வந்து கைது செய்யப்பட்ட இரவே மகன் சுடப்பட்டதாகக் கூறினார். பின்னர் 5நாள்கழித்து என்னை வரச் சொன்னார். பின்னர் நான் தாக்சப்பட்டதுடன் என்மீது மண்ணும் வீசப்பட்டது. ஒருவர் என்னை கீழே விழுத்தி பூட்ஸினால் மிதித்தார்.

"...பின்னர் நான் இணைப் பதிகாரியைச் சந்தித்தபோது எனதுமகனின்புகைப்படத்தை தருமாறும், தான் அனைத்து முகாம்களுக்கும் எனதுமகன் இருந்தால் விடுவிக்குமாறு அறிவிப்பதாகக் கூறினார்.

"ஜனாதிபதி, தேசிய பந்தோபஸ்து அமைச்சர், கண்காணிப்புக்குழு ஆகியோருக்கு நான் புகார் செய்தும், இதுவரை எனது மகனின் நிலை பற்றித் தெரியவில்லை......''

சில சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டோரை அவர்களின் உறவினர்கள் முகாம்களில் இருப்பதைக் கண்டிருந்தாலும் முகாம் அதிகாரிகள் அதனை மறுத்துள்ளனர்.

"...85 ஆகஸ்ட்டில்ஒருநாள் களுவாஞ்சிக்குடி முகாமுக்குச் சென்றபோது எனது மகன் அங்கு புல் வெட்டிக்கொண்டிருப்பதைக்கண்டேன் ஆயினும் முகாமில் விசாரித்தபோது மகன் அங்கு இல்லை எனக் கூறப்பட்டது. ஆனால் அங்கு எனது மகனை கண்டபடியால் நான் அடிக்கடிஅங்கு சென்றவண்ணமிருந்தேன்.

",...அக்ரோபர் 12 ம் திகதி நான் சென்ற போது எனது மகன் முகாம் 'கேட்' டியில் வேலை செய்வதைக்கண்டு அவரைப் பார்க்க அனுமதி கேட்டபோது அவர் அங்கு இல்லை எனக் கூறப்பட்டது. நான் அவரைக் காட்டிய போது அவரை எனக்குக் காட்ட முடியாது எனக்கூறப்பட்டது... 24அக் நான் சென்றபோத அவர் பூஸாவுக்கு அனுப்பப்பட்டுவிட்டதாகக் கூறினர். அதன் பின்னர் எனது மகனைக்காணவில்லை. ஆயினும் 'பூஸா' அனுப்பப்பட்டோர் பட்டியலிலும் அவர் பெயர் இருக்கவில்லை.

"...எனது மகனைக் கண்டுபிடிக்க நான் பல முயற்சிகள் எடுத்தபோதும் அவை பலனளிக்கவில்லை....''

85, 86ம் ஆண்டுகளில்மேற் கூறப்பட்டவை போன்ற 'காணமல் போன' பலபேரின் உறவினர்களின் சாட்சியங்கள் எப்மிடமுண்டு. இவர்களின் நிலைபற்றி அதிகாரிகள் தமக்குத் தெரியாது எனக் கூறியுள்ளார்கள்,

## 'அம்னெஸ்டி இன்டர்நஷனல்' தரும் ஆதாரம் – II

"ஒருவர் கைது செய்யப்பட்டு முகாமொன்றுக்கு கொண்டு போகப்படுவதைப் பலர் கண்டாலும் அம்முகாம் அதிகாரிகள் அதனை மறுத்துள்ளனர்.''

"...மகன் கைது செய்யப்பட்டதை அறிந்து, காரைதீவு, சந்திநோக்கி விரைந்தேன். அங்கு நான் 3 ஜீப்புகளும் 1 ட்ரக்கும் புறப்பட்டுச் செல்வதைக் கண்டேன்.

"...நானும் எனது மகளும், சகோதரியும் அவ்வழியால் சென்ற பஸ்யொன்றில் ஏறி அதிரடிப்படையினரின் வாகனங்களின் பின்னால் சென்றோம். கல்முனை வைத்திய சாலைக்கு முன்னால் அவை நிறுத்தப்பட்டவுடன், எனது மகன் 'ட்ரக்' கில்இருப்பதைக் கண்டேன். அவரது சேர்ட்டினால் அவரது கண்கள் கட்டப்பட்டிருந்தன ...பின்னர் நாம் களுவாஞ்சிக்குடி முகாம் சென்றோம் சிறிது நேரத்தில் அதிரடிப்படை வாகனங்கள் அங்குவந்தன.

"ஒருகிழமையின் பின்னர் நான் முகாம் சென்று விசாரித்தபோது, விசாரணையின் பின்னர் அவர் விடுவிக்கப்படுவார், எனக் கூறப்பட்டது. இன்னும் சிறிது நாளில் சென்று விசாரித்தபோது மணல் மூடைகளை நிரப்பும்,... வேலையில் அவர் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் முடிந்தவுடன் விடுவிக்கப்படுவார் எனக் கூறப்பட்டது

"அடுத்த முறை சென்றபோது அவர் கல்லடி முகாமுக்கு அனுப்பப்பட்டுவிட்டதாக் கூறப்பட்டது. கல்லடி முகாமில் விசாரித்தபோது அவர் கொழும்புக்கு அனுப்பப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டது....,,

85 மேயில் மூன்று பேர் முன்னிலையில் கைது செய்யப்பட்ட ஒருவரது தாயாருக்கு முதலில் கைதானவர் விடுவிக்கப்பட்டதாகவும், பின்னர் அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது ஆயினும் அவரை சாட்சிகள் அம்முகாமில் கண்டுள்ளனர்,

"...சம்பவதினம் எனது மகன். அன்று ஆரம்பமாகவிருந்த பல்கலைக்கழகத்திற்கு செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தார் அப்போது சுமார் 10 அதிரடிப் படையினர் வந்து எனது மகனையும் வீதியால் சென்றுகொண்டிருந்த இன்னும் சிலரையும் கைது செய்து கல்லடி முகாமுக்கு கொண்டு சென்றனர். கைதான ஏனையோர் 3 நாட்களில் விடுதலை செய்யப்பட்டனர்.

### இவர்களின் முடிவு....?

மேலே கூறப்பட்டவாறு 'காணமல் போன' பெரும்பாலோருக்கு என்ன நடந்துள்ளது என்பது பற்றி திட்டமாக எதுவும் தெரியவில்லை இன்னமும் அவர்கள் சிறையிலிருக்கலாம் ஆயினும், சிலசந்தர்ப்பங்களில் அவர்கள் சித்திரவதையினால் மரணமடைந்திருக்கலாமென நம்பஇடமுண்டு!

### முதலில் மறுப்பு பின்னர் விடுதலை


சில சந்தர்ப்பங்களில் ஒரு நபரின் கைதுபற்றி முதலில் அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் பின்னர் கைது செய்யப்பட்டவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

85ம் ஆண்டுகைது செய்யப்பட்ட ஒரு இளைஞன் பற்றிய

(4ம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: இ. செந்தில்

# அச்சுவேலி உலவிற்குள சித்திவிநாயகர் கும்பாபிஷேம்



250 வருடங்கள் தொன்மை வாய்ந்த அச்சுவேலி உலவிற்குள சித்திவிநாயகர் தேவஸ்தான மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை நிகழவிருக்கிறது

அச்சுவேலி கிராமத்தின் கிழக்குப் பகுதியில் செழிப்பான வயல்களும் இயற்கைச் சூழலும் அமைந்திருந்த இடத்தில் எழுந்தருள விரும்பிய சித்தி விநாயகர் இவ்வூரைச் சேர்ந்த சிதம்பர இராயருக்கு தமதுள்ளக்கிடக்கையை சூசகமாகத் தெரிவித்கதிலிருந்து இக்கோவில் ஸ்தாபிதமான தாக அறியக்கிடக்கிறது இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன்னர் அச்சுவேலி தெற்கு வாசியான விநாயகபக்தர் சிதம்பர இராமர் மருதங்கேணியிலிருந்து ஏற்றிவந்த வைக்கலுக்குள் காணப்பட்ட பேழை ஒன்றினுள்ளேயே இந்த விநாயகர் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டது.

வரலாற்றுப் பெருமையும் தொன்மைச் சிறப்பும் கொண்ட உலவிற்குளம் சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் அச்சுவேலி கிராமத் தலைவர் திரு. குமாரவேலுவின் முகாமைக் காலத்தின் பின்னர் சில உரிமைப் பிரச்னைகள் தலைதூக்க ஆரம்பித்தன. இதன்

(4-ம் பக்கம் பார்க்க)

முருகேசு வைத்திலிங்கம்

# தமிழர் மறைவுகள் . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் இதற்கு உதாரணம்:

''......சம்பவ தினத்தன்று வெளியில்சென்ற எனது 17 வயது நிரம்பிய மகன்-மறு நாள் மாலையாகியும் வீடுதிரும் பாததால், சம்பவதினத்தன்று அவ்வீதியால் சென்ற இராணு வத்தினரால் கைது செய்யப் பட்டிருக்கலாம் என நினைத் தேன். பின்னர் நான் இது பற்றி அரசஅதிபருக்கு எழுத்து மூலம் தெரிவித்தேன்.

''......அடுத்த நாள் அரச அதிபரின் கடிதத்துடன் நான் ......முகாமுக்குச்சென்றபோது எனது மகனின் பெயருடைய எவரும் கைது செய்யப்பட வில்லைஎன அறிவிக்கப்பட்டது. ......பின்னர் மாவட்டஅமைச் சரின் செயலாளரைச் சந்தித்து எனது மகன் இராணுவபாது காப்பிலுள்ளாரா என்று உறு திப்படுத்தக் கோரினேன் செய லாளர் முகாமின் உயரதிகாரி யுடன் தொடர்பு கொண்ட போது செயலாளர் [அவ்வதி காரியுடன்) பேசிய முறையிலி ருந்து எனதுமகன் அங்கில்லை என அவர் கூறியுள்ளார் என நினைத்தேன். அதிகாரியின் பதில் குறித்து எனக்குச்சந்தே கம். ஏனெனில் ஒருவர் காவ லில் வைக்கப்பட்டுள்ளாரா இல்லையா என்பதை அங்குள்ள ஆவணங்களை ஆராய்ந்த பின் னரே கூறலாம் ஆனால் அவ் வுயர் அதிகாரி உடனடியா கவே எனது மகன் அங்கில்லை எனக் கூறினர்

''......5 வாரங்களின் பின் னர் எனக்குவந்த கடிதமொன் றில் என்னை முகாமிற்கு வரு மாறு பணிக்கப்பட்டிருந்தது.

''அதேதினம் எனது மனைவி யுடன் அக் கடிதத்தையும் கொண்டு முகாம்சென்றபோது எனது மகன் என்னிடம் ஒப் படைக்கப்பட்டார்......''

கைது செய்யப்பட்ட இளை ஞரின் வாக்கு மூலம்:

''......சம்பவதினம் நான் வீதியால் சென்று கொண்டி ருக்கையில் முன்னால் இராணு வத்தினர் தமது வாகனங்களு டன் நடந்து வருவதைக் கண் டேன். கடைசி வாகனத்துள் வந்த சிலர் எனது சைக்கிளை கீழேதள்ளினர். கீழே விழுந்த என்னை ஒருவர் தூக்கி அந்த வாகனத்தில்போட்டார்எனது கண்கள் கட்டப்பட்டு முகாம் கொண்டுசெல்லப்பட்டேன்.

''......அங்கு என்னிடம் ஒரு புகைப்படம் காண்பிக்கப்பட் டது. அதில் இராணுவ உடை யுடன் கையில் துப்பாக்கி ஏந்தி யவண்ணம் என்னைப் போன்ற தோற்றமுடைய இளைஞர் காணப்பட்டார். ஆயினும் அவரது தலைமயிர் நீண்டு அடர் த்தியாயிருந்தது நான் தான் அப்புகைப்படத்திலிருந்தநான் என நினைத்து எங்கே பயிற்சி பெற்றெனக்கேட்ட போழுது நான், புகைப்படத்திலிருப் பது நானல்ல எனக்கூறி னேன்.

''......முகாமில் முஸ்லிம் இராணுவத்தினர் ஒருவரால் நான் விசாரணை செய்யப்பட் டேன். இதனிடையே நான் மின்சார அதிர்ச்சிக்காளாக்கப் பட்டேன். இது 5 தடவைகள் நடந்தது

''......நான் மூன்று முறை விசாரணை செய்யப்பட்டேன். ஒவ்வொருமுறையும் மின்சார அதிர்ச்சிக்காளாக்கப்பட்டது டன் சில வேளைகளில் தாக்க வும்பட்டேன்.

''......ஒருநாளிரவுநான் ஓரி டத்துக்குக் கொண்டு போகப் பட்டு அங்கிருந்த ஒரு நீண்ட அறையைக் காண்பிக்கப்பட் டேன். அங்கு பல இளைஞர் கள் இரத்தம் வழிந்த நிலையில் அடிகாயங்களுடன் இருந்த னர். அவர்களில்யாரையாவது தெரியுமா எனக்கேட்டபோது தெரியாதென்றேன் பலமுறை நான் பலவித சித்திரவதைக ளுக்காளாக்கப்பட்டேன் ... ...

''பின்னர் முன்காட்டப் பட்ட புகைப்படத்திலுள்ள இளைஞர் நானல்ல என்பதை அறிந்தவுடன் விடுவிக்கப்பட் டேன். விடுவிக்கப் படும் போது, முகாங்களில் எனக்கு நடைபெற்றவை பற்றி எது வும் கூறவேண்டாமெனக் கூற ப்பட்டது......''

இது போன்ற பல சம்பவங் கள் நடந்துள்ளன. முன்னாள் தூதுவரொருவரின் மகனான திரு. ராமானுஜம் மாணிக்க லிங்கத்தின் கைது இன்னொரு உதாரணம். அவர் 'காணா மல் போனது' பற்றிஉள் நாட் டிலும், வெளிநாட்டிலும் குர லெழுப்பியதன் பின்னர் அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட் டுள்ளார் என அறிவிக்கப்பட் டுள்ளது.

(நாளை தொடரும்)

## அச்சுவேலி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

விளைவாக சுமார் 15 வருடங் கள் கோவிலில் விஷேட பூசை கள் வருடாந்த வைபவங்கள் எவையும் இன்றி நித்தியபூசை மாத்திரமே நடைபெற்று வந் தது. இதனைப் பொறுக்கமுடி யாத ஊர்மக்கள் மீண்டும் விழிப்புணர்வுபெற்று தேவஸ் தானத்தை புதுப்பித்து அழகு றக் கட்டவிரும்பியதால் தற் போது முன்னரைவிட பன் மடங்கு சோபையுடன் உல விற்குளம் சித்திவிநாயகர் கோவில் கெம்பீரமாக நிற் பதை காணக்கூடியதாக இருக் கிறது.

முன்னைநாள் தர்மகர்த்தான வா திரு குமாரவேலரின் ஏக புதல்வன் விக்னராஜா தலை மையில் திருப்பணிச்சபையை அமைத்துக்கொண்ட அச்சு வேலி மக்கள் மிகக் குறுகிய காலத்தில் இந்தத் தேவஸ் தானத்தை புனரமைப்பதற்கு விநாயகரின் அருளே மூலகார ணம் என்பதில் ஐயம் எதுவு மில்லை.

8ம் திகதி திங்கட்கிழமை (8-9-86)விநாயகர் வழிபாட்டு டன் ஆரம்பமான கும்பாபி ஷேக கிரியைகள் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மகாகும் பாபிஷேக வைபவத்துடன் நிறைவெய்தும் 13ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மாலை 4-30 மணிக்குள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும். ஞாயிறு இரவு பல விசேட சமயநிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன,


**வின்ஸர்**
**வெண்திரையில்**
10-30, 2-30, 6-30
ரஜனி, ராதா, சுஜாதா
ஜெய்சங்கர், விஜயகுமார்,
மகேந்திரன் நடித்த
**துடிக்கும் கரங்கள்**
இன்னுய சில தினங்கள்
மட்டும்


**லிடோ**
10-30, 2-30, 6-30
சிவ. ஜீகணேசன்
மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(புதிய பிரதி)

**வெலிங்டன்**
10-30 2-30, 6-30
தியாகராஜன்
சில்க் சுமிதா
ஜெய்சங்கர்—பானுசந்தர்
நடித்த
**நீங்கள் கேட்டவை**
(கலர்) புதிய பிரதி


## பெண் சுட்டுக்கொலை

வவனியா, வியாழன்

வவனியா சண்டி வீதி மூன்று முறிப்பில் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் இனந்தெரியாத வர்களால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.



இலங்கைப் பனை அபிவிருத்திச் சபையினால் யாழ். பீச் இன்னில் நடாத்தப்பட்ட பனம்பொருள் உணவுகள் அறிமுக விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ் மறை மாவட்ட ஆயர் அதிவந். கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண் டகையிடம் பனையோலை மலர்களிலான சிலுவை வழங்கப்படு வதையும், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நட ராசா நிற்பதையும் படத்தில் காணலாம்.

[கொழும்புத்துறை நிருபர்]

# சகல துறைகளிலும் தமிழர் புறக்கணிக்கப்படுவது வேதனைக்குரியது

யாழ்ப்பாணம், வெள்ளி

''முதன் முதலாக ஆசிய விளையாட்டுப் போட்டியில் உயரம் பாய்தலில் தங்கப் பதக்கம் பெற்றதின் மூலம் என். எதிர் வீரசிங்கம் என் னும் தமிழ் வீரர் சர்வதேச ரீதியில் எமது விளையாட்டுத் திறமையை வெளியுலகிற்கு அறியவைத்தார். இன்று தேசிய ரீதியில் தெரிவுசெய் யப்பட்டு சர்வதேச போட்டி களிற் கலந்துகொள்ளும் வாய்ப்பு தமிழ் வீரர்களுக்கு மறுக்கப்பட்டமை வேதனைக் குரிய விடயமாகும். கல்வி, வேலைவாய்ப்பு போன்ற துறை களில் தமிழர்கள் புறக்கணிக் கப் பட்டதுபோல் விளையாட் டுத் துறைகளிலும் தமிழர் கள் புறக்கணிக்கப்பட்டது வேதனைக்குரிய விடயமா கும்.'' இவ்வாறு தொழிற் சங்கப் பிரமுகரான திரு. எஸ் கே, சதாசிவம்கோவளம் இளைஞர் மன்ற விளையாட்டி விழாவில் பிரதம அதிதியா கக் கலந்துகொண்டு உரை யாற்றுகையில் குறிப்பிட் டார்,

தொடர்ந்து அவர் பேசுகை யில் கூறியதாவது:- பலகால மாக யாழ்ப்பாணப் பாடசா லைகள் விளையாட்டுச் சங்கம் துரையப்பா விளையாட்டரங் கில் தரமான உதைபந்தாட் டப் போட்டிகளை நடாத்தி வந்தது ஆனால் இன்று அவ் வரங்கிற்கு செல்லவும் முடி யாது, பாடசாலைகள் ஒரே நேரமாக இயங்குவதால் விளை யாட்ட ாசிரியர்கள் மாலை வேளைகளில் காலங்களில் பயிற்சி வழங்கி யது போல் வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. சிராமங்கள் தோறும் சிறிய விளையாட்டு மைதானங்கள் ஆரம்பிக்கப்பட்டு விளையாட்டு ஊக்கிவிக்கப்படாவிடில் எமது இளம் சந்ததியினர் சோம் பேறிகளாகிவிடுவர்

மன்றத்தலைவர் திரு. செ, தருமராசா தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன, விளையாட்டுச் செயலாளர் திரு. த. சிவகுமாரன் விழா விற்கான சகல ஏற்பாடுகளை யும் மேற்கொண்டார். [சி]

## பாடசாலையை இடமாற்ற ஏற்பாடு

கிளிநொச்சி, வியாழன்

கிளிநொச்சி அசம்பாவிதங் களைத் தொடர்ந்து மூன்று மாதகாலமாக மூடப்பட்டுக் கிடக்கும் இராணுவ முகா மிற்கு அருகில் இருக்கும் கிளி நொச்சி கனிஷ்ட மகாவித்தி யாலயத்தை கரடிப்போக்கில் உள்ள டனித திரேசாள் மகளிர் கல்லூரியில் உள்ள மண்டபம் ஒன்றில் ஆரம்பிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

இது இவ்வாறு இருக்க மூடப்பட்ட மூன்று பாடசாலை களான மகா வித்தியாலயம், மகளிர் கல்லூரி, கனகபுரம் பாடசாலை முதலானவை கடந்த வாரம் ஆரம்பிக்கப் பட்டபோது மிகவும் குறைந்த தொகை மாணவர்களே வந்திருந்தனர். (எ)

## போராளிகள்..

(1ம் பக்கத்தொடர்ச்சி)

தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பதற்ற நிலை தோன்றியுள்ளது. நேற்றிரவு மின்சாரமும் தடைப்பட்டு இருளில் மூழ்கியிருந்தது. மயான அமைதி நிலவுகிறது.

சேதமடைந்த பொலிஸ் வாகனங்கள் மூன்றும் பொலிஸ் நிலையத்துக்குக்கட்டி இழுத்துச் செல்லப்பட்டன. (மா)

## படுவான்கரையில் மோதல் தொடர்கிறது

மட்டக்களப்பு வியா.

மட்டக்களப்பு மாவட்டத்தி லுள்ள படுவான்கரைப் பகுதி யில் தமிழீழவிடுதலைப் புலிகள் விமானப் படையினருடனும் இராணுவத்தினருடனும் தொடர்ந்து தாக்குதல் மேற் கொண்டிருப்பதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து விடு தலைப் புலிகள் வந்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

''மட்டக்களப்பு மாவட்ட படுவான்கரைப் பகுதியினை முற்றுகையிட வந்த இராணு வத்தினர் சக இயக்கத்தினரின முகாமொன்றை முற்றுகை யிட்டுத் தாக்கியுள்ளன.

மேலும் நேற்று இராணு வத்தினருடன் விமான படையினரும் சேர்ந்து படு வான்கரையை முற்றுகையிட முயற்சிக்கின்றனர். எனினும் எமது வீரர்கள் இவர்களை மேலும் முன்னேற முடியாத வாறு பலத்த நேரடி மோத லில் இறங்கியுள்ளனர்.

எமது தரப்பினரின் தாக்கு தல்கள் தொடர்கிறது ......''

[மா]

## காரைநகர் .

[1ம் பக்கத் தொடர்ச்சி]

விரைந்த எமது வீரர்களுக்கும் படையினருக்கும் இடையில் சுமார் 2 மணி நேரம் கடும் சமர் இடம்பெற்றது.

இறுதியில் எமது வீரர்களின் கடும் தாக்குதல்களால் ஹெலி கொப்டர்களும், விசைபபட கும், வேவு விமானமும் பின் வாங்கின, இத்தாக்குதலின் போது எமதுதரப்பில் எதுவித மான இழப்புகளும் ஏற்பட வில்லை'' (மா)

## கடவுச்சீட்டு விண்ணப்ப படிவங்கள்

சுண்டுக்குளி, வியா.

கடந்த பல மாதங்களாக யாழ் செயலகத்தில் தட்டுப் பாடாக இருந்த கடவுச் சீட்டு க்கு விண்ணப்பிக்கும் விண் ணப்பப்படிவங்களும், கடவுச் சீட்டு புதுப்பித்தல் படிவங்க ளும் கொழும்பிலிருந்து இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ் விண்ணப்பங்கள் இங்கு கிடைக்காததினால் கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிப்பவர் கள் வெளியாரிடம் அதிக பணம் செலுத்தியே பெற்று வந்தனர்.

தற்போது இவை இங்கு விநி யோகிக்கப்படுவதால் விண் ணப்பதாரர்கள் கடவுச்சீட்டுப் படிவத்துக்கு ரூபா ஒன்றும் புதுப்பித்தல் படிவத்திற்கு 50 சதமும் செலுத்தி கச்சேரி புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளமுடியும். (க)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டை வீரபத் திர சிவன கோவில் சங்காபி ஷேகம் இன்று நடைபெறும்.

சங்காபிஷேகத்தையும் ஆரா தனையையும் தொடர்ந்து நண்பகல் மகேஸ்வர பூசை நடைபெறும்.

இரவு சுவாமி வீதி வலம் நடைபெறும். [ச]

## இன்று

யாழ்ப்பாணம் வெள்ளி

நாவற்குழி சித்தி விநயகர் சன சமூக நிலையத் திறப்பு விழா இன்று திரு நா. செ. நாகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பட்டயக் கணக்காளர் திரு. வெ. திருஞானசம்பந்தர் இவ் வைபவத்தில் பிரதமவிருந்தின ராகக் கலந்து கொள்வார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [வா]

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து

**செல்வன் நஜீவ்காந் லோகநாதன்**

குமார் இல்லம், கர வெட்டி மேற்கைச்சேர் ந்த லோகநாதன் சுந் தரகலாராணி தம்பதிக ளின் அருந்தவப் புதல் வன் நஜீவ்காந் (சிந்து ஜன், பவா) 12-9-86 இன்று தனது 2-வது பிறந்தநாளை வீட்டில் குதூகலமாகக் கொண் டாடுகிறார். இவரை பெற்றோர், அப்பப்பா, அம்மம்மா, கொழும்பு வர்த்தக வங்கி பெரிய மாமா பெரியமாமி, பிரான்ஸ் யோகன் ரவி மாமாமார் கொழும்பு சின்னமாமா, கிளிலலி சித்திமார், பெரியப்பா பெரியம்மா ஆசை அப்பா, ஆசை அம்மா, மாமா, மாமி, சவுதி சித்தப்பாசவுதிதாத்தா சுரேந்தர் மச்சான், விஜி மச்சாள், பிரகாஷ் அண்ணா மற்றும் அப்பா மார், அம்மமார், மாமாமார், மாமிமார் அண்ணாமார், அக்கா மார் மச்சான்மார் உற் றார், உறவினர் நண்பர் கள் எல்லாம் வல்ல இறைவன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

[C 4590]

## பிரயாண ஒழுங்குகள்

இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரயாண முகவரால்

**CANADA, FRANCE, GERMANY**

நாடுகளுக்கு குறைந்த கட்டணத்தில் பயண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.
ஒரு வாரத்துக்குள் தொடர்புகொள்ளவும்.

**S.S. MILL & FARM**
Mool^a^i South, Chulipuram. [C4560]

## B E C O N

[ஸ்ரீதர் சினிமா முன்பாக]
ஸ்ரான்லி வீதி,

87 A/L DAY CLASS

| | | |
|---|---|---|
| தூய / பிரயோக } கணிதம் | — | திரு. நல்லையா |
| பௌதீகம் | — | திரு. மணியம் |
| இரசாயனவியல் | — | திரு. செல்வா |
| | | திரு. சிவநாதன் |
| தாவரவியல் | — | திரு. சர்வானந்தா |
| விலங்கியல் | — | திரு. கெங்கா |

ஆரம்பம்; திங்கள் 9.30

87 A/L DAY CLASS

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| கணக்கியல் | — | திரு. மரியதாஸ் |
| வர்த்தகம் | — | திரு. ரட்ணம் |
| அளவையியல் | — | திரு. S.S மனோகரன் |
| இந்து நாகரீகம் | — | திருமதி அருள்நங்கை |
| தமிழ் | — | திரு. நாகேஸ்வரன் |

ஆரம்பம்: திங்கள் 7.30 (A1326)

## எமது புதிய வெளியீடுகள்

(1) சந்திரமோகன் ★ விஜயசாந்தி
"பூ ஒன்று புயலானது"
(CAMERA COPY)

(2) சிவாஜி ★ பத்மினி ★ கண்ணாம்பாள்
"இல்லறஜோதி"
(PYRAMID MASTER)

(3) எம். ஜி. ஆர். ★ சரோஜாதேவி ★ நம்பியார்
"கலங்கரைவிளக்கம்"
(PYRAMID MASTER)

(4) விஜயகாந் ★ சந்திரசேகர் ★ இளவரசி
"ஊமைவிழிகள்"
(V G P. MASTER)

(5) சிவாஜி ★ ரஜனி ★ K. R விஜயா)
"நான் வாழவைப்பேன்"
(AL BAYAN ORIGINAL

**குணம் வீடியோ சென்ரர்,**
42, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(A 1327) தொலைபேசி: 23665


### வெளிநாட்டு
## பிரயாண ஒழுங்குகள்

★ ஈராக்:- (ஆஸ்பத்திரி கிளீனேஸ்)
(ஈராக்குக்கு ஒரு மாதத்திற்குள் பயணம் செய்யலாம்)
★ லிபியா:- (ஒயில் கொம்பனி வேக்கேஸ்)
★ சவூதி அரேபியா:- (ஆஸ்பத்திரி, விமான நிலைய கிளீனேஸ்)
★ சவூதி அரேபியா:-(பூங்காவேலையாட்கள்)
★ லெபனான்:- (லேபறேஸ்)
★ குவைத்:- (கிளீனேஸ்)
★ குவைத்:- (வீட்டுப் பணிப் பெண்கள்)
★ சிங்கப்பூர்:- (வீட்டுப் பணிப் பெண்கள்)
★ குவைத்:- (பெண் ஆஸ்பத்திரி கிளீனேஸ்)

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக பாஸ்போட், 7 படம் மற்றும் ஆவணங்களுடன் நேரில் வந்து தொடர்புகொள்ளவும்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்**
பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.
பி. கு:- இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன் ஒழுங்கையால் வரவும். (A 1080)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



க. சந்திரசேகரம்
(B. Sc.)
அன்னை மடியில்:
17-03-1933
இறைவன் அடியில்:
13-08-1986

அன்புத் தெய்வமே! மின்னுமல் முழங்காமல் இப்படி ஒரு இடி திடீரெனவிழும்என்று எவரும் எதிர்பார்த்ததில்லை ஐயா! உங்களை எதிர்பார்த்திருந்த எங்களுக்கு உங்கள் உயிர் இல்லாத உடலை எதிர்பார்த்திருக்க வேண்டிய அவல நிலையை ஏன் ஐயா அந்த இறைவன் இவ்விதம் ஏற்படுத்தான்? ஐயா எமது உள்ளத்தில் உள்ள கண்ணீர்த் தடாகத்தில் வீற்றிருக்கின்ற உங்களை எவராலும் பிரிக்க முடியாது. ஐயா! உங்கள் உடலை நல்லபடியாக எமக்கு சேர்க்க உதவிய இறைவனிடம் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும் அன்பு மனைவி: கமலாதேவி, அன்புச் செல்வங்கள்: லங்கேஸ்சரன், குமுதினி, ரதினி. சகோதரர்கள், உற்றார், உறவினர்கள். A 1265

## 6-ம் மாத நினைவஞ்சலி



சிவலிங்கம் மதியழகன்
(பெரியதம்பி வீர வேங்கை, வவுனியா)
தோற்றம்:
23-03-1967
ஆண்டவன் பறிப்பு:
12-03-1986

மூத்தவனே! முழுமதியே! நித்தம் நினைவில் நிற்பவனே! தத்தம் செய்தாய் உயிரை சத்தம் கொண்ட சன்னங்களுக்கு. நினைவுகள் அழிவதில்லை புலரும் வேளையில் கலக்கும் தியாகத்தை உலகமும் மறப்பதில்லை. அன்னையின் விடிவுக்காய் தன்னை மறந்துபோய் உன்னையே இழந்ததால் பொன்னைவிட உயர்ந்துவிட்டாய் - வீரனே.

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்: அப்பா, அம்மா, அக்காமார் அண்ணன்மார், தம்பிமார், தங்கைமார், மாமன்மார், மாமிமார், பெரியப்பா, பாட்டி
C 4570

## நன்மை தரும் நாரணியே

இராகம்: மாயாமாளவகௌளை ஆதி

பல்லவி
தாரணியெல்லாம் புகழும் தத்துவமஸியே
நாரணியே நன்மையெல்லாந்தருவாய் நமஸ்தே
(தாரணி)

அநுபல்லவி
பவதாரணியே பக்தர்கள் தொழுதேத்தும்
சிவதாரிணியே சித்தர்கள் தொழுதேத்தும்
(தாரணி)

சரணம்
பட்டு நிலா வெளியில் பதித்த நல்வயிரம் போல்
நட்ட நடு நிசியில் நடமிடும் நாரணியே
பெட்ட வெளிதன்னில் விளங்கிடும் விமாகியே
கஷ்ட மெலாந்தீர்த்து காப்பது நின்கடனே
(தாரணி)

முருகவேபரமநாதன்

## குலனையூர் ஞானவைரவர்

திக்கெட்டும் களத்தருளும் தீஞ்சுவையானவன்
திரிசூலம் தனைக் கொண்டு எமக்கருள் புரிகின்றான்
கும்பாபிஷேகம் காணும் குஞ்சுசோலையுடையவன்
கோவில் கொண்டருளுகின்றான குலனையம்பதிதனில்

- ஞானவைரவர் பஜனைக் குழு

(இன்று வெள்ளிக்கிழமை அராலி வடக்கு, குலனையூர் ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகம்)

### இன்று கல்வி அறிவூட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வெள்ளி கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலையம் நடாத்தும் கல்வி அறிவூட்டல் சம்பந்தமான கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை சாலை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி வளவில் அமைந்துள்ள நிலைய விரிவுரை மண்டபத்தில் கோப்பாய் கல்வியதிகாரி திரு ஆ. வ. தங்கராசா தலைமையில் இடம்பெறுகின்றது.

இக் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கலாநிதி திருமதி பார்வதி கந்தசாமி கலாநிதி நா. சுப்பிரமணியம், துணை விரிவுரையாளர் திரு சு. நாகேஸ்வான், வளர்ந்தோர் கல்வியதிகாரி, திரு சி எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர் இக் கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை கோப்பாய் வட்டாரக் கல்வி மூலவள நிலைய பொறுப்பதிகாரி திரு எஸ் சி எஸ் சிதம்பரநாதன் மேற்கொண்டுள்ளார்.
[இ]

### விவசாய கருத்தரங்கு

மாவிட்டபுரம், வியாழன் மானிப்பாய் மறுமலர்ச்சி மன்ற ஆதரவில் நாளை 13ம் திகதி தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் விவசாய கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. [இ]

### சீட்டிழுப்பின் முடிவுகள்

வட அளவை சாத்தனூர் கலட்டி மாரியம்மன் ஆலய தொண்டர் சபை நிதிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பின்முடிவுகள்.

| | |
|---|---|
| 1 - 271 | 2 - 217 |
| 3 - 458 | 4 - 3708 |
| 5 - 393 | 6 - 2059 |
| 7 - 2898 | 8 - 46 |
| 9 - 655 | 10 - 204 |
| 11 - 3692 | 12 - 1152 |
| 13- 3398 | |

இங்ஙனம்
தொண்டர்சபையினர்.
(C 4579)

## திறப்பு விழா

யாழ். நகரின் நவீன சந்தையில்
இல: 67, 68ல்
அமைந்திருக்கும்

# 'லக்கி பிளாஸா'

இன்று பிற்பகல் 2 30 மணியளவில்

திறந்துவைக்கப்பட்டு தனது வியாபாரத்தை ஆரம்பிக்கவுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அந்நேரம் அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எம்மிடம் றேடியோ, டி.வி, மணிக்கூட்டு வகைகள், பேஜட்டங்கள், மின்சார மனையியல் பொருட்கள் மற்றும் பலவகையான பென்ஸி பொருட்கள், நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி: 23509

(C 4583)

### வன்முறைச் சம்பவங்களை முறியடிக்க

# பஞ்சாப் மாநில அரசு பாதுகாப்பு படையின் எண்ணிக்கையை அதிகரித்தது

## பல வன்செயல்களுக்கு பொறுப்பான "பல்ஜித்சிங்" கைது!

**புதுடில்லி, செப் 11**

பஞ்சாப் மாநில அரசு தற்போது அங்கு நிலவிவரும் வன்முறைச் சம்பவங்களை கருத்தில் கொண்டு விசேஷ பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கையை அதிகரித்து பாதுகாப்பு நடவடிக்கையை பலப்படுத்தவுள்ளதாக பஞ்சாப் மாநில உள்விவகார அமைச்சர் திரு. கன்வால்ஜித்சிங் அறிவித்துள்ளார்.

இவ் அறிவிப்பு தொடர்பாக தெரியவருவதாவது: பஞ்சாப்பில் தொடரும்வன்முறையால் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படவுள்ள முக்கியஸ்தர்களான சுமார் 500க்கும் அதிக மானவர்களின் வேண்டுகோளிற்கிணங்கவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்த 500 பேரில் அமைச்சர்கள், எதிர்க்கட்சி தலைவர்கள் இந்து, சீக்கியமதகுருமார்கள், பத்திரிகையாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பொது மிரட்டல் செய்திகளை அடுத்தே இவர்கள் தமக்கு பாதுகாப்பை பலப்படுத்துமாறு கேட்டிருந்தனர்.

பஞ்சாப்பில் உள்ளமுக்கியஸ்தர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கையில் சுமார் 35,000 துருப்பினர் கடமையிலீடுபட்டுள்ளனர்: தற்போதைய பாதுகாப்பு நடவடிக்கை அதிகரிப்பை தொடர்ந்து இனிமேல் நவீன ஆயுதங்களில் திறமையான பயிற்சிபெற்ற இரண்டாயிரம் படை வீரர்கள் கடமையிலீடுபடுவார்கள்.

தற்போது பஞ்சாப்மாநிலத்தில் பத்துலட்சம் பொலிஸாரும் இரண்டலட்சத்து எழுபதாயிரம் இராணுவவீரர்களும் (85,000 எல்லை பாதுகாப்பு வீரர் உட்பட) கடமையில் ஈடு படுகின்றனர்.

இதற்கிடையில் பல வன்முறைச்சம்பவங்களிலும் கடந்த யூலைமாதம் பஸ் ஒன்றில்வைதது 14 பேர் கொலை செய்யப்பட்டது தொடர்பாகவும் தேடப்பட்டு வந்த 'பல்ஜித்சிங்' பஞ்சாப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்,

மேலும் இந்திய முன்னாள் இராணுவத் தளபதி அருண் வைத்யாவை கொலை செய்தவர்களை மிகத்திறமையாக கைது செய்தமைக்காகஇன்ஸ்பெக்டர் ஏ ஏ. கைப்பட்டானுக்கு 15 000 ரூபா பரிசளிக்கப்பட்டுள்ளதாக மஹாராஷ்ரா பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (சி)

---

டார்ஜிலிங்கில்

## குர்கா பிரிவினைவாதிகள் பொலிசார் கடும்மோதல்

**புதுடில்லி, செப் 11**

குர்கா பிரிவினை வாதிகளுக்கும் பொலிஸாருக்கு மிடையில் டார்ஜிலிங்கில் ஏற்பட்ட கடும் மோதலில் ஒருபொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட இருவர் கொல்லப்பட்டதுடன் பாடசாலை உட்பட பல வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது: குர்காதேசிய விடுதலை முன்னணியை சேர்ந்த ஆயிரம் உறுப்பினர்கள் ஆயுதங்களுடன் இந்த முன்னணியை எதிர்க்கும் இயக்கம் நடத்தியகூட்டமொன்றைகுழப்பமுயன்றபோது இதனைதடுக்க முயன்ற பொலிசாருடன் ஏற்பட்டமோதலிலேயே மூவர் கொல்லப்பட்டனர்.

குர்க்கா தேசிய விடுதலை முன்னணியை சேர்ந்த பலர் காயமடைந்துள்ளனர். பாடசாலை ஒன்றிற்கு தீவைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டதுடன் டார்ஜிலிங் பாராளுமன்றஉறுப்பினர் ஒருவரின் வீடு கொள்ளையடிக்கப்பட்டு கொளுத்தப்பட்டது. மேலும் நான்கு வீடுகளும் தீவைதது கொளுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த யூலை மாதம் டார்ஜிலிங்கில் நடைபெற்ற வன்முறைச்சம் பவங்களில் குர்கா தேசிய விடுதலை முன்னணியை சேர்ந்த 12பேர் பொலிஸாரின் துப்பாகிச் சூட்டுக்கு பலியானதைத் தொடர்ந்தேவன்முறைகள் மேலும் நீடித்து வருகின்றன.

நேபாளி மொழிபேசும் குர்காக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் டார்ஜிலிங்கில் தனி ராஜ்ஜியம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக தீவிரவாதிகள்முயற்சித்து வருகிறார்கள் ஆனால் மேற்கு வங்காள அரசாங்கம் இதனை எதிர்த்து வருகிறது. [சி]

---

சிலியில்

## பொலிஸ் நடவடிக்கை அதிகரிப்பு: பத்திரிகைகளுக்கெதிராக கடும் நடவடிக்கை

**சந்தியாகோ, செப் 11**

சிலி அரசு முற்றுகை நிலையையும் பொலிஸ் நடவடிக்கை அதிகாரங்களையும் மேலும் மூன்றுமாதங்களுக்கு நீடித்துளது. பத்திரிகைகளுக்கு எதிரான புதிய நடவடிக்கைகளையும் கடுமையாக கடைப்பிடிக்கப் போவதாகவும் அது அறிவித்துள்ளது.

உலகச் செய்திகள்

கடந்த திங்கட்கிழமை சிலி ஜனாதிபதி அகஸ்டோ பினோசெட் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி தோல்வியில் முடிந்ததை தொடர்ந்தே இப்புதியநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஒருதரப்பான மற்றும் தவறான செய்திகளை வெளியிட்டமைக்காக இத்தாலிய செய்தி ஏஜென்ஸியான 'இன்ஸார்' மேறகொண்டு செய்திகளை அனுப்பக்கூடாது என்றுஅதன் மீது தடைவிதித்துள்ளது. இதற்குமுன் 'ராய்ட்டர்'மீதும் இதே மாதிரியான தடை விதிக்கப்பட்டது.

மேலும் எதிர்க்கட்சிகளை சேர்ந்த ஆறு செய்திப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெளியிடக்கூடாதென தடை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் அவசரகால நிலைமைகள் அறிவிக்கப்பட்டவுடன் கடத்திச் செல்லப்பட்ட எதிர்க்கட்சி இடதுசாரி உறுப்பினர் 'திரு. பெர்னன்டோ விடாவுருசா' கொலைசெய்யப்பட்டுள்ளார் எனகூறப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கொலை முயற்சியிலிருந்து தப்பிய ஜனாதிபதிக்கு ஆதரவாக ஆயிரக்கணக்கான மக்கள்சந்தியாகோவிலில் நடைபெற்ற பேரணிஒன்றில் கலந்துகொண்டனர். (சி)

---

## கடும் வரட்சியால் கால்நடைகள் பாதிப்பு

**நெடுந்தீவு, வியாழன்**

நெடுந்தீவில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால் பெருந்தொகையான கால் நடைகளும் குதிரைகளும் தரவைப் பகுதியில் இறங்கத் தொடங்கியுள்ளன.

தரவைக்கு அண்மையில் உள்ள குடிமனைகளில் இறந்த கால் நடைகளின் துர்நாற்றம் வீசுவதால் சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கலாம் எனவும் அஞ்சப்படுகிறது. [சி]

---


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு கிழமையும் கொழும்பிலிருந்து நேரடியாகப் பிரயாணம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

★ மத்திய கிழக்கு நாடுகள் ★

வருமான ஒழுங்குகளுடன் அழைத்துச் செல்லப்படும்.

அத்துடன்

பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங் உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

UNIVERSAL AGENCIES

யூனிவேர்சல் ஏஜென்ஸி

125 [455] ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில், பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

[A 1324]



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்

★ ஜேர்மன் ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம் மேற்கொள்ள அரிய வாய்ப்பு. செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

எதிர்வரும் 15-ம் திகதி அழைத்துச் செல்ல இருப்பதால் 15-ம் திகதிக்கு முன் பதிவுசெய்து கொள்ளவும்.

குவைத், அபுதாபி, சவூதிஅரேபியா ஆகிய நாடுகளுக்கு வருமானம் பெற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் பாஸ்போட் பொண்ட், டிக்கட் என்பன செய்து கொடுக்கப்படும்

GROUP ATLANTIC

(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)

163, Hospital Road, Jaffna.

(A 1065)



## பிரயாண ஒழுங்குகள்

இதோ

நாம் வழங்கும் பயணச் சேவைகள்

★ டென்மார்க் ★ பிரான்ஸ்

★ ஜேர்மனி ★ சுவிற்சலாந்து

★ கனடா ★ அவுஸ்திரேலியா

★ லண்டன்

முதலிய நாடுகளுக்கு உடனடிப் பிரயாண ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

குவைத் சுப்பர்மார்க்கட் பணியாளர்கள் ஆண்கள், பணிப்பெண்கள் வெற்றிடம்

சிங்கப்பூர் — குவைத்

10 படம், 1 கலர் படம், பாஸ்போட் என்பவற்றுடன் நேரில் வரவும்.

எமது ஏனைய சேவைகள்

பாஸ்போட், விசா, பொண்ட், ரிக்கற் என்பவற்றை தாமதமின்றி பெற்றுத் தருகின்றோம்.

ரஜீவன் ரவல்ஸ்

(B. M. C. முன்பாக)

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23665

(A 1316)

# இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 27 (1986-9-12)
வெள்ளி
திதி: நவமி மு இ. வரை
நக்ஷத்திரம்: மூலம் மு இ வரை

மேடம்:- நல்லவர்களின் அறிமுகம் இன்று கிடைக்கும். குடும்பத்திலும் இனிமை தவழும் சிலர் வாழ்க்கையிலும் அதிர்ஷ்டம் காணும்.

இடபம்: குடும்பத்திலும் பிளவுகள் தோன்றலாம். ஆதரவு காட்டியவர்களே இன்று உங்களை அலட்சியப்படுத்துவார்கள். எதையும் நிதானமாகச் செயல்ப்படுத்தவும்.

மிதுனம்: உறவுகள் பலப்படும். காதலர்கள் இணைவர். சடமையிலும் கண்ணியம் தென்படும்.

கடகம்: உடல்நலம் பாதிக்கப்படலாம். உத்தியோகத்திலும் வீழ்ச்சி தென்படும். எவ் விடயத்தையும் முன்யோசனையுடன் செயல்படுத்தவும்.

சிங்கம்: பிதாவழித்தனமும் உண்டு. பிறர் ஆதரவும் கிட்டும். நீண்டநாள் பிசகு இன்று தீரும்.

கன்னி: தொழில் மகிழ்ச்சியுண்டு, தொல்லைகள் நிவர்த்தியுண்டு சுபகருமங்களும் இடம் பெறலாம். சுபதினம்.

துலாம்: உத்தியோக உயர்வும் உண்டு. பொருளாதாரத் துறையிலும் அபிவிருத்தி காணும். தெய்வசிந்தனையும் மேலோங்கிநிற்கும்.

விருச்சிகம்: எதிலும் தடுமாற்றம் தென்படும். தொழில் விடயத்திலும் நிதானம் அவசியம். காதலர் வாழ்விலும் கசப்பான தினம்.

தனுசு: பொருள் தவறக்கூடும். கொடுக்கல் வாங்கல் பிணக்கும் தோன்றும். வீண் விவாதங்களைத் தவிர்த்து நடக்கவும்.

மகரம்: குடும்பத்திலும்குதூகலம் தோன்றும். வெளியிடத் தொடர்பும் பெருகும். பெரியவர்கள் ஆசியும் தப்பாமல் கிடைக்கும்.

கும்பம்: வீண்விவாதங்கள் ஏற்படும். சிநேகிதர் பகையுமுண்டு கழுகுப்பார்வையும் வட்டமிடும்.

மீனம்: வாகனச்சிறப்புமுண்டு. வரவிலும் திருப்தியுண்டு. ஆசிரியர்களுக்கும் நன்னாள்.

திருமலை
வே. ரவீந்திரன்

## அம்புலன்ஸ் சேவைக்குப் பாராட்டு

சாவகச்சேரி, வியாழன்

கைதடி சாந்தி நிலையத்திற்கான அம்புலன்ஸ் சேவையினை ரெசோ சேவையினர் தற்போது அளித்து வருகின்றனர்.

இந்நிலையத்தில்இருந்து யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படவேண்டிய நோயாளர்களை இவர்களின் அம்புலன்ஸில் கொண்டு சென்று உதவிவருகின்றனர்.

இவர்களின்சேவையைநிலைய நிர்வாகம் பாராட்டியுள்ளது. [இ]

## மாத இறுதிக்குள்: அரசு - கூட்டணி சந்திப்பு

கொழும்பு, வியா

இலங்கை அரசாங்கம் இனப்பிரச்னை தொடர்பாக சமர்ப்பித்த திருத்தியமைக்கப்பட்ட நகலின் இரு பாகங்களை பரிசீலனை செய்வதை கூட்டணி பின்போட்டுள்ளது.

கூட்டணியின் தலைமைப்பீடம் இதனை இன்று ஆராய விருந்தது. நாளை சனிக்கிழமை இவ் ஆலோசனைகளை பரிசீலனை செய்யவுள்ளதாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளையில் அரசாங்கத்திற்கும் கூட்டணிக்குமிடையிலான அடுத்தசுற்றுப் பேச்சுவார்த்தைகள் இம்மாத முடிவுக்குள் கொழும்பில் அல்லது புதுடில்லியில் நடைபெறலாம் என அமைச்சரவை பேச்சாளர் திரு ஆனந்த திஸநாயக்க அல்விஸ் தெரிவித்துள்ளார்.



றேட்டரிக்கழகத்தால் நடாத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சாம்பியன் வெற்றிக்கேடயத்தைத் தட்டிக்கொண்ட யாழ் பமிலியன்ஸ் (திருக்குடும்பக் கன்னியர் மடக்கழகம்) வீராங்கனையினரைப் படத்தில் காணலாம் நிற்பவர்கள் இடமிருந்து வலம்:செல்விகள் தி. பானு, அ சார்லட், தி. துளசி. வே மரினு. இருப்பவர்கள் இடமிருந்து வலம்; செல்விகள் செ. நளாயினி, லூட்ஸ் டொமினிக் (குழுத்தலைவியும், உடற்பயிற்சி ஆசிரியையும்) த. றேஷினி.

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சுழிபுரம் பனிப்புலம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தானப் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் 14ம்திகதிஞாயிறு காலை ஆரம்பமாகி தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறும்.

ஞாயிறு காலை 7 மணிக்கு யாக பூஜையுடன் தொடங்கும் வைபவத்தில் பகல் மகா கும்பாபிஷேகம் நடைபெறும். [சி]

## கிளிநொச்சியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரஜைகள்குழு நிதியுதவி

இராமநாதபுரம், புதன்

கிளிநொச்சியில் இடம் பெற்ற வன் செயல்களினால் இறந்தவர்களின் குடும்பத்திற்கும், ஊனமடைந்தவர்களுக்கும் இம்மாதம் 13ம் திகதி கிளிநொச்சி பிரஜைகள் குழு நிதி உதவி வழங்கப் போவதாக பிரஸ்தாப பிரஜைகள் குழு பொருளாளர் எஸ். சிவராசலிங்கம் அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் குறிப்பிட்ட திகதியில் கிளிநொச்சி பிரஜைகள் குழு காரியாலயத்திற்கு வந்து இந்த நிதி உதவியைப் பெற்றுக் கொள்ளுமாறும்அவர்கேட்டுள்ளார். [ஓ]

## யாருடையது?

சண்டிலிப்பாயைச் சேர்ந்த திரு கே. ஜெகநாதன் என்பவர் சுன்னாகம் கிழக்கில் ஒரு லேடீஸ் கைக் கடிகாரம் ஒன்றினைக் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும், [இ]

## புங்குடுதீவில் உதைபந்தாட்ட விழா:

# "ஈஸ்ரன்" விளையாட்டுக்கழகம் சாம்பியன் கேடயத்தைப் பெற்றது

யாழ்ப்பாணம், வெள்ளி

புங்குடுதீவில் கடந்தவாரம் நடைபெறற உதைபந்தாட்ட விழாவில், 'நஸரேத்' விளையாட்டுக் கழகம் சாம்பியன் கேடயத்தை தட்டிக் கொண்டது.

புங்குடுதீவு 'ஈஸ்ரன்' விளையாட்டுக் கழகத்தின் 26-வது ஆண்டு விழாவை முன்னிட்டு 'நாகலிங்கம் ஹரிகரன்' ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக, புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலய மைதானத்தில், 7-வீரர்கள் பங்கு பற்றிய 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியில், தீவுப் பகுதியிலுள்ள 35 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின

மூன்று நாட்களாக நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் 'நஸரேத்' விளையாட்டுக் கழகம் ஈஸ்ரன்' விளையாட்டுக் கழகத்தை 2—1 கோல்களால் வெற்றி பெற்று சாம்பியன் கேடயத்தைப் பெற்றது

இவ் விளையாட்டு விழாவுக்கு, 'யாழ் உதைபந்தாட்ட லீக்'கின் தலைவர் டாக்டர் ஜே பி ஸி பிலிப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார் சிறப்பு விருந்தினராக டாக்டர் கணேசன் கலந்து கொண்டார்

மேற்படி விளையாட்டு விழாவில் சிறந்த வீரருக்கான பரிசை வீரர் வேதபாலனும் சிறந்த விளையாட்டுக் கழகமாக ஊர்காவத்துறை 'றேஞ்சஸ்' கழகமும் பெற்றன

இவ்விளையாட்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற சகல உதைபந்தாட்டப் போட்டிகளுக்கும் திருவாளர்கள் எம் தேவதாஸ், ஏ. எஸ். அகஸ்ரின், எஸ் எம். மாட்டின் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தார்கள்.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் காரியதரிசி திரு. எம. தேவதாஸ், போட்டிக்குழுத் தலைவர் திரு சற் சிங்கராயர், தணுதிகாரி திரு எஸ் தாசீசியஸ் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் பயிற்சியாளர் திரு. கே டபிள்யூ விமலராசா ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

இவ் விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் தீவுப்பகுதி விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. பீலிக்ஸ் செய்திருந்தார். [வி]


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மனி ★ சவூதிஅரேபியா

கனடா, டென்மார்க், ஜேர்மனி, சவூதி ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் உங்களை நேரடியாக அழைத்துச் செல்வார். ஜேர்மனி செல்ல விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் இம்மாதம் நடுப்பகுதியில் 15-ம் திகதி)பயணம் செய்யலாம். உடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு தச்சு, மேசன், விவசாயம், வீதித்திருத்தம், ஆஸ்பத்திரி கிளினேஸ் ஆகிய பதவிகளுக்கு செல்லவிரும்புவோர்

16-ம் திகதிக்கு முன்பாக
உடன் தொடர்பு கொள்ளவும்
பாஸ்போட், பொண்ட் ஆகியனவும்செய்து தரப்படும்.

பஸ்வழி இல.
764, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

Branch:
ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ்
வங்களாவடி, வேலணை,

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம்வீதி, கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில். [A 1321]



## பிரயாண ஒழுங்கு

குவைத்-நஷனல் கிளீனிங் கம்பனி
(இரண்டாம் அறிவித்தல்)

| | |
|---|---|
| S தர்மராஜா | H 0480600 |
| N ஜெயசீலன் | H 0321797 |
| K. ரட்ணசிங்கம் | H 0102892 |
| V தியகநாயகலிங்கம் | H 0215936 |
| K. A. சிவராஜா | H 0474044 |
| G P. தாமரைமணாளன் | H 0460039 |
| A C அருள்தாஸ் | H 0281546 |
| S இந்திரராஜா | H 0320080 |
| J A வலன்டீன் | G 0341780 |
| T. S சிவதாசன் | H 0281339 |
| V S சேனதி | H 0244462 |
| A K கர்ணன் | H 0239180 |
| T செல்லன் | H 0347126 |
| P S தேவராசன் | H 0106813 |
| K. N இந்திரன் | H 0354027 |
| K. A ஆனந்தராஜா | H 0240976 |
| R. சேகர் | H 0419775 |
| A. மோதிலால் மேரு | H 0483326 |
| V. குணேந்திரலிங்கம் | J 0009842 |
| E. P. மாணிக்கம் | H 04 51 5 |
| J. F பெர்னாண்டோ | H 0291184 |
| S. ரவிச்சந்திரன் | H 0[illegible]69[illegible]4 |
| S. குழந்தைவேல் | H 0310680 |

மேற்குறிப்பிட்ட நபர்கள் உடனடியாக எமது காரியலயத்திற்கு வரவும். உங்கள் பிரயாணம் 15-09-86முன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தயவு செய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

யூனிவேசல் ஏஜென்சி
125, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்-
(பெற்றோலியம் கூட்டுத்ஸ்தாபனத்துக்கு முன்பாக - ஆயுர்வேத கல்லூரி அருகாமை ) [A 1322]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வெள்ளிக்கிழமை 12-9-86

### மாகாணசபை அமுலாகுமுன்னர்

# அகதிகள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள்

கொழும்பு, வெள்ளி

மாகாண சபைத் திட்டம் அமுல் செய்யப்படுவதற்கு முன்னர், தங்கள் சொந்த இடங்களிலிருந்து வெளியேறி, அகதிகளாக முகாம்களிலும், வேறு இடங்களிலும் தஞ்சமடைந்தவர்களை பழைய இடங்களில் குடியேற்ற அரசு ஏற்பாடு செய்துவருகிறது.

சுமார் 1,25,000 பேர் சொந்த இடங்களிலிருந்து வெளியேறி அகதிகளாக வேறுஇடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களை பழைய இடங்களில் குடியேற்றி அவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

மாகாணசபைத் திட்டம் அமுல் செய்யப்படுமுன்னர் இவர்களை பழைய இடங்களில் குடியேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

87ம் ஆண்டு ஜனவரிமாதத்திற்கு முன்னர் அகதிகளை பழைய இடங்களில் குடியேற்றும் வேலை முடிந்துவிடுமெனக் கூறப்படுகிறது. (இ)

## புனர்வாழ்வு அமைச்சு கோரிக்கை

கொழும்பு, வியாழன்

'நாட்டில் நடைபெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களில் பாதிக்சப்பட்ட மக்களின் சகல விபரங்களையும் ஒக்டோபர் மாத இறுதிக்குள் சேகரிக்குமாறு சகல அரசாங்க அதிபர்களையும் புனர்வாழ்வு அமைச்சு கோரியுள்ளது.

இவ் விபரங்கள் சேகரிக்கப்பட்டதும் அவர்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதுடன் முன்னர் அவர்கள் இருந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்தப்படுவர் என்றும் மேலும் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது. (சி)

### தமிழ்நாட்டில்

## இலங்கைத் தமிழர் பலர் தொடர்ந்து அகதி முகாம்களில்

சென்னை செப் 11

இலங்கையில் இனக் கலவரம் ஆரம்பித்ததிலிருந்து கடந்த வாரம்வரை ஒருலட்சத்து இருபத்தேழாயிரத்துத் தொழாயிரத்து நாற்பத்திநாலு அகதிகள் தமிழ்நாடு வந்துள்ளார்கள். இவர்களுள் முப்பத்து மூவாயிரத்து எண்ணூற்றெண்பது பேர்கள் நிர்க்கதியான நிலையில் இருப்பதால் இன்னமும் முகாங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

இலங்கையில் இடம்பெறும் இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டு அகதிகளாக வந்தோருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்ட திறப்பு விழாவில் தமிழ்நாடு மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு. இராமசுவாமி இவ்வாறு கூறினார்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இவ்வீடுகளை மதுரை கூடல்நகரில் கட்டிக்கொடுத்துள்ளது. தமிழ்நாடு வீட்டு வாரியத்துறை அமைச்சர் திரு. நல்லசாமி நேற்றுமுன்தினம் இவ்வீடுகளைத் திறந்துவைத்தார். மொத்தம் ஒருகோடியே பத்துலட்சம் ரூபா செலவில் 792 வீடுகள் கட்டப்படவுள்ளன. (வா)

## கிழக்கில் பாடசாலை பாதுகாப்புக் குழுக்கள்

மட்டக்களப்பு, வியாழன்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின்பாதுகாப்பைமேற்கொள்ளுமுகமாக சகல பாடசாலை அதபர்களுக்கும் மட்டக்களப்பு மாவட்ட கல்விப்பணிப்பாளர் இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: பாடசாலையினுள் மாணவரை தவிர பிறரை அனுமதிப்பதை கட்டுப்படுத்தல், பாடசாலைகள் ஆரம்பமாக முன்பும் ஆரம்பமாகிய பின்பும் வகுப்பறைகளை சோதனை செய்தல், மாணவர்கள், ஆசிரியர்கள், காவலாளிகள் சந்தேகத்திற்கிடமான பொருள் எவற்றையாவது காணும் பட்சத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை அவர்கள் முன்கூட்டியே அறிந்து வைத்திருத்தல் என்பனவாகும்.

சகல பாடசாலைகளிலும் அதிபரை தலைவராக கொண்ட ஆசிரியர் மாணவர்கள் உள்ளடக்கிய கண்காணிப்புக்குழுக்களை அமைத்து பாடசாலை மாணவர்களின் நலனை கவனிப்பதற்கே இவ்வாறுன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். [சி]

## உதவிப்பணம் பெறுவோர் தொகை அதிகரிப்பு

சுண்டுக்குளி, வியாழன்

யாழ் மாவட்டத்தில் பொதுசன உதவி மாதாந்தப் பணம் பெறுபவர்களின் தொகை அதிகரித்துவருகிறது.

மேற்படி உதவிப்பணத்தை பெறுவதற்காகவிண்ணப்பித்த பலரது விண்ணப்பங்கள் குடாநாட்டிலுள்ள ஒவ்வொருஉதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் நூற்றுக்குமேல் தேங்கிக் கிடப்பதாக அறியப்படுகிறது.

இவற்றைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவாகளுக்கு சமூகசேவைத்திணைக்களத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படாததினாலேயே இவர்களுக்கான உதவிப்பணம் வழங்க முடியாமல் இருப்பதாக யாழ். சமூகசேவைப்பகுதி உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்த அநேக ஏழைமக்கள் தினமும் தமது பகுதி கிராமசேவையாளர்களிடமும், உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களுக்கும் அலைந்து திரிவதைக் காணக் கூடியதாக உள்ளது. (எ)

### செப்டெம்பர் மாத

## ஓய்வூதிய கொடுப்பனவுகள் கோட்டையில் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளி

தபாற்கந்தோர் மூலம் ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்கான ஒய்வூதியக்கொடுப்பனவுகள் இமுறை வழமையாக வழங்கப்படு வந்த யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் வழங்கப்படமாட்டாது.

இக்கொடுப்பனவுகள் யாழ். கோட்டையிலுள்ள அஞ்சல் அலுவலகத்திற்குப்பக்கத்திலேஉள்ள அறையில் வைத்து இம்முறை வழங்கப்படும். இதுபற்றிய விபரங்களை அறிய விரும்புகின்றவர்கள் தத்தமது பகுதியிலுள்ள உபதபாலகங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

செப்டம்பர் மாத ஒய்வூதியம் பெறுகின்ற தபால்கந்தோர் கதிவிபரம் வருமாறு:

15ந் திகதி: புங்குடுதீவு, சுழிபுரம், வட்டுக்கோட்டை, 18ந் திகதி யாழ்ப்பாணம் (யாழ் மாநகரசபை எல்லைக்குள் அடங்கும் உபஅஞ்சல் அலுவலகங்கள்). 19ந் துகதி சங்கானை, கைதடி, அளவெட்டி வண்ணார்பண்ணை 22ந் திகதி கரவெட்டி, ஊர்காவற்றுறை, அச்சுவேலி, 23ந் திகதி வசாவிளான் கொக்குவில், சுன்னகம். 24ந் திகதி பருத்தித்துறை, அனலைதீவு, நயினாதீவு 25ந் திகதி நெடுந்தீவு, வல்வெட்டித்துறை, கொடிகாமம். 26ந் திகதி சாவகச்சேரி, காங்கேசன்துறை, காரைநகர். 29ந் திகதி கோப்பாய், மானிப்பாய், பண்டத்தரிப்பு. 30ந் திகதி தெல்லிப்பழை, உரும்பராய், வேலணை, யாழ்ப்பாணம். (ச)

## எரிபொருள் விற்பனை

பண்டத்தரிப்பு, வியாழன்.

நீண்டகால இடைவெளிக்கு பின்னர் பண்டத்தரிப்பு எரிபொருள் விற்பனை நிலையத்தில் பொதுமக்களுக்கு பெற்ரோல் மண்ணெண்ணை டீசல் என்பன விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பெற்ரோல் ஒரு லீற்றர் 17 ரூபா 50 சதத்திற்கும். மண்ணெண்ணை ஒரு லீற்றர் 10 ரூபாவாகவும் இங்கு விற்பனை செய்யப்படுகிறது. (வா)

## சகல வழிகளிலும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதி மக்கள் அனைவரும் தீவிரவாதிகளல்லர். அவர்களை அரசு சகலதுறைகளிலும் புறக்கணித்து வருவதால் அவர்களிடம் விரக்தி மனப்பான்மை தோன்றியுள்ளது என்றுகூறிய வண. விமலதாரதேரோ வவனியாப்பகுதியிலுள்ள சகல இன மக்களின் ஒற்றுமைக்காகவே வவனியா சமாதானக் குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது'' என்றும் கூறினர். (வவ-நி)

## கோஷ்டி மோதல் 10 பேர் காயம்

நெல்லியடி, வியாழன்

துன்னாலை தெற்கில் நடைபெற்ற கோஷ்டி மோதலில் காயமடைந்த 10 பேர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையல் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பழைய குடும்பத்தகராறு வாய்ப்பேச்சில் ஆரம்பித்து மோதலில் முடிந்தது. விதலைப் புலிகள் தலையிட்டு சமரசம் செய்துவைக்கப்பட்டது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 12-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.

## எரிபொருள்பெற வாகனங்கள் நீண்டவரிசை

யாழ்ப்பாணம். வெள்ளி

யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் பெற்ரோல், டீசல், மண்ணெண்ணை என்பன கும்த்த விலைக்கு விற்பனை செய்யப்படுவதால் அநேகமான எரிபொருள் நிலையங்களில் வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்று எரிபொருட்களைப் பெற்றுக்கொள்வதைக்காண முடிகிறது.

இதேவேளை யாழ்ப்பாணத்தின் சந்திகளிலும் தெருவோரங்களிலும் எரிபொருட்களை விற்பனைசெய்துவந்தவியாபாரிகளின் தொகையும் கணிசமான அளவு குறைந்துள்ளமையையும் காணமுடிகிறது.

பெற்ரோல் ஒரு லீட்டர் 17 ரூபா 50சதமாகவும், டீசல்ஒரு லீட்டர் 12ரூபாவாகவும், மண்ணெண்ணை ஒரு லீட்டர் 10 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. [ச]

## இருபது துப்பாக்கிகள் கொள்ளை

கொழும்பு, வியாழன்

ஹொரவ பொத்தானை கிராமமொன்றினுள் கடந்த சில தினங்களுக்கு முன் சென்ற இனந்தெரியாத கோஷ்டி ஒன்று அப்பகுதியிலுள்ளவர்களிடமிருநது சுமார் 20 துப்பாக்கிசளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது: கடந்த சில தினங்களுக்கு முன் ஹொரவபொத்தானை இரத்னமலை கிராமத்தில் நுழைந்த இக் கோஷ்டி கிராம சேவையாளரை பிடித்து கட்டி வைத்துவிட்டு அங்குள்ள சுமார் 20 வீடுசளில் புகுந்து 20 துப்பாக்கிகளும் மற்றும் ஒருவரிடமிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக தெரியவருகிறது. (சி)

### யாழ் மாவட்டத்தில்

## இந்தஆண்டு நான்குலட்சத்து 50,000 புத்தகம் விநியோகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாவட்ட பாடசலை மாணவர்களுக்கு இந்த ஆண்டு சுமார் நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மற்றுமொரு தொகுதியாக ஒரு லட்சத்து 17 ஆயிரம் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டன. இவற்றைவிட ஐம்பதாயிரம் சமூகக் கல்வி, விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடப்புத்தகங்கள் விரைவில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அவ் அதிகா தெரிவித்துள்ளார். [சி]

## மரண அறிவித்தல்

### திருமதி றேசம்மா அம்புறேஸ்

திருமதி றேசம்மா அம்புறேஸ் காலமானார். இவர் காலஞ் சென்ற ஆசிரியர் அம்புறேஸ் (தெல்லிப்பழை) அவர்களின் அன்பு மனைவியும், மரியரத்தினம். குலசிங்கம் [பரந்தன் வை எம் சீ ஏ.], திருமதி அமிர்தம் கருணராசா, யோண்தாசன் (சட்டத்தரணி, மன்னார்) அம்புறேஸ் (ஆசிரியர், யோசேவ் வித்தியாலயம், சொழும்புத்துறை) ஆகியோரின் அன்புத் தாயாரும், றாபி, நிர்மலா, பவளவதி (ஆசிரியை, புனித சாள்ஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் அரியாலை புனிதயூதாதேயு கோவிலடி இல்லத்திலிருந்து 12-09-86 [இன்று] வெள்ளிக்கிழமை பி.ப 3 மணிக்குப் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்: A. S. T. அம்புறேஸ்.

(C 4577)

## மரண அறிவித்தல்

கோப்பாய்

### பொன்னுத்துரை இராசசேகரம்

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.பொன்னுத்துரை இராசசேகரம் (ஓய்வு பெற்ற இலிகிதர், பொலிஸ் இலாகா, யாழ்ப்பாணம்) நேற்றுக்காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிககப்படும்.

(C 4591)

தகவல்: யோகராசா.